THE GANDHIGRAM RURAL INSTITUTE
(Deemed to be University)
GANDHIGRAM – 624302, DINDIGUL DISTRICT, TAMILNADU
Ministry of Education (Shiksha Mantralaya), Gov. of India
Accredited by NAAC with A++ Grade (4th Cycle)

All communications should be addressed to the Registrar by designation and not by name

Dr. M. SUNDARAMARI
REGISTRAR i/c

EPABX No: 0451-2452371-2452376
Phone(off):0451-2452323
Fax No:0451-2454466
E-mail: registrar@ruraluniv.ac.in
Website: www.ruraluniv.ac.in

---

Ref.: GRI/Dev.1/MoE Circular/2026-27 10.06.2026

**சுற்றறிக்கை**

**பொருள்: சிக்கன நடவடிக்கைகள் மற்றும் தேசிய பொறுப்புணர்வுமிக்க வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுதல் – தொடர்பாக.**

-----------

இந்திய அரசின் கல்வி அமைச்சகம், தனது **OM No. 29-17/2026-S&S, நாள் 03.06.2026** மூலம் அனைத்து உயர்கல்வி நிறுவனங்களும் மற்றும் தன்னாட்சி அமைப்புகளும் சிக்கன நடவடிக்கைகளையும் தேசிய பொறுப்புணர்வுமிக்க வாழ்க்கை முறைகளையும் கடைப்பிடித்து ஊக்குவிக்க அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி, பல்கலைக்கழகத்தின் அனைத்து பள்ளிகள், துறைகள், மையங்கள், பிரிவுகள் மற்றும் அலுவலகங்களின் தலைவர்கள் கீழ்க்கண்ட அறிவுறுத்தல்களை ஆசிரியர்கள், அலுவலர்கள், பணியாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் மாணவர்களிடையே பரப்பி, அவை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:

1. பொதுப் போக்குவரத்து, மெட்ரோ ரயில், கார் பகிர்வு (Car Pooling) போன்றவற்றைப் பயன்படுத்தி எரிபொருள் நுகர்வைக் குறைத்தல் மற்றும் மின்சார வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவித்தல்.
2. கருத்தரங்குகள், மாநாடுகள், பயிற்சி முகாம்கள், கல்விச் சுற்றுப்பயணங்கள் போன்றவற்றிற்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமானப் பயணங்களை குறைத்தல்.
3. கருத்தரங்குகள், மாநாடுகள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் கூட்டங்களை இயன்றவரை இணையவழி தளங்கள் மூலம் நடத்துதல்.
4. தலைமையகத்திற்கு வெளியே பயணம் மேற்கொள்ள வேண்டிய நேரடி கூட்டங்கள் மற்றும் அலுவல் பயணங்களை மிகவும் அவசியமான சூழ்நிலைகளில் மட்டுமே மேற்கொள்ளுதல்.
5. விழாக்கள், நிகழ்ச்சிகள், கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளில் வழங்கப்படும் சிற்றுண்டி மற்றும் உபசரிப்பு செலவுகளை குறைந்தபட்சமாக வைத்தல்.
6. **“உள்ளூருக்காக குரல் கொடுப்போம் (Vocal for Local)”** என்ற கொள்கையை முன்னிறுத்தி, உள்நாட்டில் தயாரிக்கப்படும் (Swadeshi) பொருட்களை முன்னுரிமையுடன் வாங்கி பயன்படுத்துதல்.
7. பொதுமக்களின் உடல்நலனையும் நாட்டின் பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் வகையில் சமையல் எண்ணெய் பயன்பாட்டைக் குறைக்க ஊக்குவித்தல்.
8. சூரிய மின்சக்தி உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களின் பயன்பாட்டை ஊக்குவித்தல்.

**பதிவாளர் (பொறுப்பு)**

Cc. The Professor in-charge of Computer Centre, GRI – For intra mail and GRI website